Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பிரிவு - அ

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

ii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு

அ) தனி வாணிகர்

ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுப் பங்கு நிறுமம்

ஈ) இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம்.

2. தனியாள் வணிகம் துவங்க

அ) குறைந்தது இரு நபர்கள் தேவை

ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை

இ) ஒரு நபர் மட்டும் தேவை

ஈ) குறைந்தது பத்து நபர்கள் தேவை.

3. கூட்டாண்மையில் வங்கித் தொழில் செய்ய அதிகபட்ச நபர்கள்.

அ) 2 ஆ) 10

இ) 20 ஈ) 30.

4. தனி வரையறு நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு

அ) பங்குகளின் செலுத்தப் பெற்ற மதிப்பளவாகும்.

ஆ) பங்குகளின் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவாகும்.

இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும்.

ஈ) பங்குகள் மீது கோரப்பட்டத் தொகை அளவாகும்.

5. .................. எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

அ) 10

ஆ) 15

இ) 20

ஈ) வரம்பில்லை.

6. பங்கு மாற்றகங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது

அ) நிறுமத்தின் எல்லா பங்குகளையும்

ஆ) அரசால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள்

இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்

ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்.

7. சிறுபான்மையினர் நலத்தைப் பாதுகாக்கும் தொழிலமைப்பு

அ) தனிவாணிகம்

ஆ) பொதுக் கழகம்

இ) கூட்டுறவுச் சங்கங்கள்

ஈ) பொது நிறுமம்.

8. பொதுக் கழகத்தின் நிருவாகம் இதைப் பெற்றிருக்கிறது

அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம்

ஆ) செயல்பாட்டுச் சுதந்திரமின்மை

இ) கட்டுப்பாடுடன் கூடிய சுதந்திரம்

ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்.

9. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது

அ) தனி வாணிகர்

ஆ) இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம்

இ) கூட்டுறவுச் சங்கம்

ஈ) கூட்டாண்மை.

10. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு

அ) பூரண நன்னம்பிக்கை

ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

இ) கூடித் தொழில் செய்ய விருப்பம்

ஈ) இடற்பாட்டில் பங்கேற்பு.

11. ஒரு நிறுமத்தின் செயற்பாட்டு எல்லையைக் கீழ்க்கண்ட ஆவணங்களுள் எ
உணர்த்துகிறது ?

அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு

ஆ) நிறுமச் செயல் விதிகள்

இ) தகவலறிக்கை

ஈ) சட்ட முறை உறுதி விளம்பர்.

12. ஒரு இயக்குநர்

அ) நிறுமத்தின் முகவராக

ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக

இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ) மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார்.

13. ஒரு காளை ஊக வணிகர் இதை நம்புகிறார்

அ) விலைகள் உயருதல்

ஆ) விலைகள் குறையும்

இ) நிலையான விலைகள்

ஈ) விலையில் மாற்றமேதும் இருக்காது.

[ Turn ov

14. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்

அ) மாற்ற முடியும் ஆ) திருப்பிச் செலுத்தக் கூடியது

இ) திருப்பிச் செலுத்த முடியாதது ஈ) இவற்றில் ஏதும் இல்லை.

15. அரசு நிறுமம் இவற்றின் கீழ் பதிவு செய்யப்படுகிறது

அ) மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம்

ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956

இ) அரசாணை

ஈ) அரசியலமைப்பு சாசனம்.

16. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்

அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம்

இ) 1932 சட்டம் ஈ) 1966 சட்டம்.

17. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்றங்கள் இயற்றிய தனி சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்.

18. கீழ்க்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் ?

அ) சட்டமுறை நிறுமங்கள் ஆ) தனி வரையறை நிறுமங்கள்

இ) பொது வரையறை நிறுமங்கள் ஈ) பட்டய ( சாசன - Chartered ) நிறுமங்கள்.

19. பங்கு மாற்றகம் பங்குகளின் ஊக வாணிகத்தை

அ) அனுமதிப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை

இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடை செய்யும்.

20. கீழக்கண்ட நிறுமங்களுள் எது பதிவாளரிடம் தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் ?

அ) பங்கு வெளியீடு மூலம் பொதுமக்களிடமிருந்து பங்கு முதல் திரட்டும் ஒரு பொது வரையறை நிறுமம்.

ஆ) தன் இயக்குநர்கள் மற்றும் அன்னாரின் உறவினர்களிடமிருந்து முதல் தொகையைத் திரட்ட ஏற்பாடு செய்திருக்கும் ஒரு பொது வரையறை நிறுமம்.

இ) ஒரு தனி வரையறை நிறுமம்.

ஈ) மேற்சொன்ன அனைத்து நிறுமங்களுமே.

I. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய் :

21. அரசாங்கத்தின் கொள்கைகள் ...................... சாதகமாக உள்ளது.

22. ...................... என்பது மிகப் பழமையான தொழிலமைப்புகளின் வடிவமாகும்.

23. வங்கித் தொழில் அல்லாத பிறதொழிலுக்கு அதிகபட்ச உறுப்பினரின் எண்ணிக்கை ...................... .

24. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு ...................... .

25. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய ...................... தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

26. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் ...................... எனவும் அழைக்கப்படும்.

27. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கியக் குறிக்கோள் ...................... .

28. ...................... துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படும்.

29. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள் ...................... .

30. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு ...................... .

31. வழக்கமாகப் பெறக்கூடிய நிலையான வீதப் பங்காதாயத்துடன், கூடுதல் பங்காதாயம் பெற உரிமை உள்ள பங்குகள் ...................... பங்குகள் என அழைக்கப்படும்.

32. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ...................... இல் பெயரிடப்பட்டிருப்பர்.

33. புதிய பங்குகளை வெளியிடுவதற்குப் பெரும்பாலானோர் மேற்கொள்ளும் முறை ...................... .

34. ...................... விழுக்காடு மட்டுமே பங்காதாயமாகக் கூட்டுறவு சங்கத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

[ Turn over

35. பொதுக்கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ...................... நிர்வாகம் செய்கின்றது

36. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ...................... .

37. தனிவரையறு நிறுமத்தில் குறைந்தது ...................... இயக்குநர்களாவது இரு

வேண்டும்.

38. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கு உள்ள கால இடைவெளி ................

மாதங்களுக்கு மிகக் கூடாது.

39. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம் பெறச் செய்

...................... எனப்படும்.

40. தன் செய்கைகள் மூலம் அவசர காலங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ள கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமை ...................... எனப்படும்.

## பிரிவு - ஆ

குறிப்பு : i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 4 வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $10 \times 4 =$

41. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன ?

42. ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன ?

43. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?

44. உழையாக் கூட்டாளி என்பவர் யார் ?

45. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு என்றால் என்ன ?

46. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும் ?

47. கூட்டுருவாக்கத்திற்குப் பின், தொழில் தொடக்கச்சான்றிதழ் பெற எந்தெ

ஆவணங்களைத் தாக்கல் செய்யவேண்டும் ?

48. சிறப்புப் பொதுக்கூட்டத்தை யார் கூட்டலாம் ?

49. மாற்று இயக்குநர் என்பவர் யார் ?

50. ஒப்புறுதியளித்தல் என்றால் என்ன ?

51. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தம் என்பதன் பொருள் யாது ?

52. இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார் ?

53. வேளாண்மை சாரா கடன் சாரா சங்கம் என்றால் என்ன ?

54. அரசுத் தொழில் என்பதின் வரைவிலக்கணத்தைக் கூறுக.

55. அரசு துறைவாரி அமைப்பிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு - இ

குறிப்பு : i) ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $5 \times 8 = 40$

56. சிறு குறிப்பு வரைக :

அ) முனைமத்தில் பங்கு வெளியீடு.

ஆ) வட்டத்தில் ( Discount ) பங்கு வெளியீடு.

57. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை ?

58. அமைப்பு முறையேடு என்றால் என்ன ? அதில் அடங்கியுள்ளப் பொருளடக்கங்கள் யாவை ?

59. முறைகேடான ஒதுக்கீடு குறித்து குறிப்பு வரைக.

60. முதலீட்டாளர்களுக்கும் - ஊகவணிகருக்கும் உள்ள வேறுபாடு யாது ?

61. போல்ட் ( BOLT ) எவ்வாறு செயல்படுகிறது ? அதன் ஆற்றல்கள் யாவை ?

62. கூட்டுறவுச் சங்கத்தின் குறைபாடுகளை விவரிக்க.

63. பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை வரைக.

## பிரிவு - ஈ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்க அளவில் விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $4 \times 20 = 80$

64. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

அல்லது

அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.

65. தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது - விவரி.

அல்லது

கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாட்டில் ஏதேனும் பத் வேறுபாடுகளை எழுதுக.

66. கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

அல்லது

பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை ?

67. பொது வரையறு நிறுமமொன்றினை அமைக்கும் முறையைச் சுருக்கமாக வரையவும்.

அல்லது

ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாது ?